### முதல்வர் மு.க.ஸ்டாலினின் தொலைநோக்குச் சிந்தனை திட்டங்களால்

# நீடித்த நிலையான வளர்ச்சிக் குறியீடுகளில் தமிழ்நாடு முன்னணி மாநிலம்!

## ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அறிக்கை பாராட்டு!

**சென்னை, ஜூலை 22 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்குச் சிந்தனைகள் தந்த திட்டங்களின் பயன்கள்! வறுமை ஒழிப்பில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் இடம்! 13 இனங்களில் நீடித்த நிலையான வளர்ச்சிக் குறியீடுகளில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னணி மாநிலம்! என ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அறிக்கை பாராட்டு தெரிவித்துள்ளது.**

2023-24ஆம் ஆண்டிற்கான ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பு நீடித்த நிலையான வளர்ச்சிக் குறியீடுகள் பற்றிய நான்காவது ஆய்வு அறிக்கையை அண்மையில் வெளியிட்டுள்ளது.

நிதி ஆயோக் நிறுவனத்தின் 2018, 2019 மற்றும் 2020 ஆகிய மூன்றாண்டுகளின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வளர்ச்சிக் குறியீடுகளை எல்லாம்விட, இந்த 202324ஆம் ஆண்டிற்கான அறிக்கை திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு மாபெரும் வளர்ச்சி கண்டுள்ளது என்பதைப் பறைசாற்றியுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி தொலைநோக்குச் சிந்தனைகளுடன் செயல்படுத்தி வரும் சீரிய திட்டங்களால் வறுமை ஒழிப்பில் தமிழ்நாடு இன்று இந்தியாவிலேயே முதல் இடம் பெற்றுச் சிறந்த மாநிலமாகத் திகழ்கிறது.

காலநிலை மாற்றம் - சுற்றுச்சூழல் பராமரிப்பு, குறைந்த செலவில் மாசிலா எரிசக்தி இரண்டிலும் தேசிய அளவில் தமிழ்நாடு முதல் மாநிலமாக உயர்ந்துள்ளது.

மேலும், பசிப்பிணி அகற்றல், பொருளாதாரம் மற்றும் சிறந்த வேலைவாய்ப்பு, தரமான கல்வி, மக்கள் நலம் மற்றும் சுகாதார வாழ்வு, தொழில் வளர்ச்சி புத்தாக்கத் தொழில் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள், தூய்மையான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல், சமத்துவமின்மையைக் குறைத்தல், உற்பத்தி மற்றும் நுகர்வு, அமைதியைக் காத்தல், நீதி நிர்வாகம், வலுவான நிறுவனங்கள் பாலின சமத்துவம், ஆகிய இனங்களில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக உயர்ந்து சிறந்துள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திட்டங்களான, மகளிர்க்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், அரசுப் பள்ளிகளில் படித்து உயர் கல்வி தொடரும் மாணவிகளுக்கு மாதம் 1,000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம், மகளிர்க்குக் கட்டணமில்லாப் பேருந்து விடியல் பயணத் திட்டம், பள்ளிகளில் காலை உணவுத் திட்டம், சமத்துவத்தை நிலைநாட்டும் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளுக்கேற்ற திறன்களை வழங்கும் நான் முதல்வன் திட்டம் முதலான சமூகநீதித் திட்டங்கள் உட்பட பல்வேறு திட்டங்களால் குடும்பப் பொருளாதாரம் உயர்ந்து வறுமை ஒழிப்பில் கடந்த காலங்களைவிட மாபெரும் வளர்ச்சி கண்டு இந்தியாவிலேயே வறுமையை ஒழிப்பதில் தமிழ்நாடு தலைசிறந்த முதன்மை மாநிலமாக விளங்குகிறது என்பதை இந்த நிதி ஆயோக் அறிக்கை நிரூபித்துள்ளது.

அதாவது, வறுமை ஒழிப்புத் திட்டத்தில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தலைசிறந்து விளங்குகிறது என்பது உட்பட 11 இனங்களில் தமிழ்நாடு நீடித்த நிலையான வளர்ச்சிக் குறியீடுகளில் தேசிய சராசரியைவிட அதிகமாக வளர்ச்சி பெற்று முன்னணி மாநிலமாகவும், இரண்டு இனங்களில் தேசிய சராசரிக்கு இணையாகவும் வளர்ச்சி பெற்று 13 இனங்களில் மிகவும் சிறந்துள்ளது தமிழ்நாடு.

இவையெல்லாம், முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் தொலைநோக்குச் சிந்தனைகளுடன் கூடிய சிறந்த சீரிய திட்டங்களால் தமிழ்நாடு பெற்றுள்ள வளர்ச்சிக்கான சான்றுகளாகும் என்று பலரும் பாராட்டுகின்றனர்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ஒன்றியம், கணக்கன் குப்பம் ஊராட்சியில் உள்ள ஆர். சி. நிதி உதவி பெறும் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் விரிவாக்கத்தை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார். உடன் திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்யான்ஷு நிகம், செஞ்சி ஒன்றியப் பெருந்தலைவர் விஜயகுமார் உள்ளனர்.

### நீலகிரி மாவட்டம் சேரங்கோடு - பாலவயல் பொன்னானி ஆற்றில் மூழ்கி

# உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**நீலகிரி, ஜூலை 22 -**

**நீலகிரி மாவட்டம், சேரங்கோடு கிராமம், பாலவயல் பகுதியிலுள்ள பொன்னானி ஆற்றில் மூழ்கி உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்குவதாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம், நெல்லியாளம் கிராமத்தைச் சேர்ந்த செல்வன்.குணசேகரன் (வயது 18) த/பெ.குமார் என்பவர் நேற்று முன்தினம் (20.07.2024) பிற்பகல் 01.30 மணியளவில் சேரங்கோடு கிராமம், பாலவயல் பகுதியிலுள்ள பொன்னானி ஆற்றில் மீன்பிடிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக ஆற்றில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

# தமிழ்த்தென்றல் திரு.வி.க.வின் கனவுகளை நினைவாக்கி வருகிறார் முதல்வர்!

## மணவழகர் மன்றத்தின் 68வது ஆண்டு விழாவில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!

*சென்னை, ஜூலை 22 -*

தமிழ்த்தென்றல் திரு.வி.க.வின் கனவுகளை நினைவாக்கி வருகிறார் தமிழ்நாடு முதலமைச்சர் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாவுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று 19-7-2024 அன்று மணவழகர் மன்றத்தில் நடைபெற்ற 68ஆம் ஆண்டு முத்தமிழ் விழாவில் உரையாற்றினார்.

அவ்வுரை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரை இனத்திற்காக உழைத்தவர்கள், மொழிக்காக உழைத்தவர்கள், தேச நலனுக்காக உழைத்தவர்களுக்கு நினைவிடம் அமைப்பதில் எந்தளவுக்கு உறுதுணையாக இருந்து கொண்டிருக்கிறார் என்பதை நாம் அனைவருமே நன்றாக அறிவோம்.

இந்த மணவழகர் மன்றம் தொடங்கும் போது, அதற்கான கரு, காரணம் என்பதனை தமிழ் கலை ஒழுக்கத்தினையும், தமிழ் மொழியினையும், தமிழர் நலன்களையும் கட்சி பூசலின்றி போற்றுதல், வளர்த்தல், காத்தல் இவைகள்தான் இந்த மன்றத்தின் நோக்கங்களாகக் கொண்டுச்செல்லப் பட்டிருக்கிறது.

இந்த மன்றத்தில் ஆக்கப் பூர்வப் பணிகளாக உருவாக்கப்பட்டது என்பது திரு.வி.க.வின் பெயரால் நூல்நிலையம் அமைப்பது, க.நமச்சிவாயம் பெயரால் படிப்பகத்தினை அமைப்பது, டாக்டர் சி.நடேசனார் பெயரில் இரவுப் பள்ளிகள் அமைப்பது, மறைமலை அடிகளார் பெயரில் இலக்கிய வகுப்பு நடத்துவது, நக்கீரன் பெயரில் பட்டிமன்றம் நடத்துவது, மணவழகர் பெயரில் வானொலி சிறுவர் மன்றம் அமைப்பது, பொது மக்களிடையே சுகாதாரப் பிரச்சாரத்தை மாதந்தோறும், ஊர்தோறும் மேற்கொள்வது போன்ற பல்வேறு வகையான ஆக்கப் பணிகளை மேற்கொள்ளவதற்காக இந்த மன்றம் அமைக்கப்பட்டிருக்கிறது.



அதைத்தான் நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் குறிப்பாக மதுரையில் மிகப் பெரிய நூலகம் ஒன்றை ஏறத்தாழ ரூ.220 கோடி ரூபாய் செலவில் நான்கு லட்சத்திற்கும் மேலான புத்தகங்களுடன் நூலகம் ஒன்றை அமைத்துத்தந்து தென்தமிழகத்திற்குப் பெருமைச் சேர்த்துள்ளார்கள். அதோடு மட்டுமல்லாமல் கோவை, திருச்சி போன்ற மாநகரங்களிலும் நூலகங்கள் அமையும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

மணவழகர் மன்றத்தின் கொள்கைகளாக இருப்பவைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எந்தளவுக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார் என்பதை நாம் நன்றாக அறிவோம். ஆகவே வேறெந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு இன்றைக்கு அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை என்பது அபரிமிதமாக வளர்ந்து வருவதை நம்மால் பார்க்க முடிகிறது.

இன்றைக்கு சுகாதாரத் துறையைப் பொறுத்தவரை மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48, இதயம் காப்போம், கலைஞரின் வருமுன் காப்போம், மக்களைத் தேடி மருத்துவ ஆய்வகத் திட்டம், தொழிலாளர்களைத் தேடி மருத்துவத் திட்டம் இப்படி ஏராளமானத் திட்டங்கள் இந்தியாவுக்கு மட்டுமல்ல, உலகத்திற்கே வழிக்காட்டக்கூடிய திட்டங்களாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் மணவழகர் மன்றத்தில் உரையாற்றினார்.

### நீலகிரி மாவட்டத்தில் கன மழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள்:

# மீட்பு - நிவாரண நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூலை 22 -

நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், எடுக்கப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் நடைபெற்ற ஆய்வுக் கூட்டம் தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை குறித்து, கடந்த மூன்று நாட்களாக மாவட்டத்துக்கான பொறுப்பு அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்டவர்களுடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் நிவாரணப் பணிகள் குறித்த உத்தரவுகளைத் தொலைபேசி வாயிலாக வழங்கிக் கொண்டிருந்தேன்.

மழை தொடரும் நிலையில், எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்து நேற்று முன்தினம் தலைமைச் செயலகத்தில் ஆய்வு செய்தேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் கைது நடவடிக்கை!

# அலட்சியப் போக்குடன் செயல்படும் ஒன்றிய அரசின் தூக்கம் கலையுமா?

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கேள்வி!

*சென்னை, ஜூலை 22 -*

தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கை தொடர்கிறது. ஆனால் மீனவர்களின் உரிமையை பாதுகாக்க வேண்டிய ஒன்றிய அரசு அலட்சிய போக்குடன் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் தூக்கத்தில் உள்ளது என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து 20.7.2024 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-



தினகரன்

ஜூலை 20, 2024 சனிக்கிழமை

தூக்கம் கலையுமா?

தமிழ்நாட்டை சேர்ந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் அடிக்கடி கைது நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த இரு வாரங்களுக்கு முன்பு, தமிழ்நாட்டை சேர்ந்த 13 மீனவர்கள் வங்கக்கடலில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

தற்போதைய நிலவரப்படி, 173 மீன்பிடி படகுகளுடன் 80 தமிழக மீனவர்கள் இலங்கை அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ளனர். மீனவர்கள் இதுபோன்று சிறைபிடிக்கப்படுவதால், அவர்களது வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களது குடும்பத்தினர் பெரும் சோகத்திற்கு உள்ளாகி இருக்கின்றனர்.

மீன்பிடி படகு பறிமுதல் மட்டுமின்றி, மீனவர்களின் உயிருக்கும் உத்தரவாதம் இல்லாத நிலை தொடர்கிறது. ஏற்கனவே, கடந்த 2017ம் ஆண்டு ராமேஸ்வர மீனவர் பிரிட்ஜோ, இலங்கை கடற்படையால் சுட்டுக்கொல்லப்பட்டார். கடற்பரப்பில்

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் அடிக்கடி கைது நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த இரு வாரங்களுக்கு முன்பு, தமிழ்நாட்டை சேர்ந்த 13 மீனவர்கள் வங்கக்கடலில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

தற்போதைய நில வரப்படி, 173 மீன்பிடி படகுகளுடன் 80 தமிழக மீனவர்கள் இலங்கை அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ளனர். மீனவர்கள் இதுபோன்று சிறைபிடிக்கப்படுவதால், அவர்களது வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களது குடும்பத்தினர் பெரும் சோகத்திற்கு உள்ளாகி இருக்கின்றனர்.

மீன்பிடி படகு பறிமுதல் மட்டுமின்றி, மீனவர்களின் உயிருக்கும் உத்தரவாதம் இல்லாத நிலை தொடர்கிறது. ஏற்கனவே, கடந்த 2017ம் ஆண்டு ராமேஸ்வர மீனவர் பிரிட்ஜோ, இலங்கை கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டார். கடற்பரப்பில் மீன் பிடிக்கும் மீனவர்களை சுட்டுக்கொல்வது என்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கை கடற்படையினர், சர்வதேச நெறிமுறைக்கு எதிராக செயல்பட்டு வருவதையே இது காட்டுகிறது.

தமிழ்நாடு மீனவர்கள் காக்கப்பட வேண்டும் என இங்குள்ள அரசியல் தலைவர்கள் தொடர் அழுத்தம் கொடுத்து வந்தாலும், ஒன்றிய பா.ஜ. அரசு கண்டு கொள்ளவில்லை. தமிழ்நாட்டு மீனவர்கள், ஏதோ வெளிநாட்டினர் போன்று ஒன்றிய பா.ஜ. அரசு பாராமுகமாக செயல்படுகிறது. இலங்கை சிறையில் உள்ள தமிழ்நாட்டு மீனவர்களை விடுவிக்க, ஒன்றிய பா.ஜ. அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், கடந்த 11ம் தேதி ஒன்றிய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார். ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கையும் இல்லை.

ஒன்றிய அரசின் இந்த அலட்சிய போக்கிற்கு பாடம் புகட்டும் வகையில், நேற்று முன்தினம் சென்னை ஐகோர்ட் மதுரை கிளை, சரியான குட்டு கொடுத்துள்ளது. அதாவது, “தமிழ்நாட்டு மீனவர்களும் இந்திய குடிமக்கள்தான். அவர்களை சமமாக கருதி, ஒன்றிய அரசு மீட்பு நடவடிக்கையில் இறங்க வேண்டும்” என எச்சரிக்கை கொடுத்துள்ளது. நீதிமன்றத்திடம் இருந்து குட்டு வாங்குவது, ஒன்றிய அரசுக்கு ஒன்றும் புதிது அல்ல. ஏற்கனவே, நீட் தேர்வு மோசடி வழக்கில் உ ச் ச நீ தி ம ன் ற த் தி ட ம் இருந்து குட்டு வாங்கியது.

தொடர்ந்து, டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் கைது விவகாரத்திலும் உச்சநீதிமன்றத்திடம் குட்டு வாங்கியது. தற்போது, மீனவர்கள் விவகாரத்தில் சென்னை ஐகோர்ட் மதுரை கிளையிடம் குட்டு வாங்கியுள்ளது. நீதிமன்றம் வாயிலாக எத்தனை முறை குட்டு வாங்கினாலும் ஒன்றிய பா.ஜ. அரசின் தூக்கம் கலையாமல் இருப்பது விநோதமாக உள்ளது. இலங்கையுடன் நாம் செய்து கொண்ட கச்சத்தீவு உடன்பாடு காரணமாக, கச்சத்தீவை ஒட்டியுள்ள பகுதிகளில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன் பிடிக்கும் உரிமை பறிபோய்விட்டது. அவர்களது உரிமையை பாதுகாக்க ஒன்றிய பா.ஜ. அரசும் தவறிவிட்டது.

மீனவர்கள் பிரச்சினை, காவிரி நீர் பிரச்சினை, நெடுவால் பிரச்சினை, பாலாறு பிரச்சினை, பவானி ஆறு பிரச்சினை, மேகதாது அணை பிரச்சினை, முல்லை பெரியார் அணை பிரச்சினை என எதுவாக இருந்தாலும், தமிழ்நாட்டை ஒன்றிய அரசு வஞ்சித்து வருகிறது. தமிழ்நாட்டை சேர்ந்தவர்களாக இருந்தாலும், குஜராத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் இந்திய குடிமக்கள்தான். அவர்களது உரிமையை, நலனை பாதுகாப்பது ஒன்றிய அரசின் கடமை. அதை உணர்ந்து செயல்படுவதே நல்லது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி, கண்டமங்கலம் மேற்கு ஒன்றியம், சிறுவந்தாடு ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்டம் முகாமை விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவ அணி இணை செயலாளருமான டாக்டர் இரா. இலட்சுமணன் துவக்கி வைத்து மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர் வி.ஜி.பிரபாகரன், ஒன்றியக் குழு பெருந்தலைவர் ஆர்.எஸ்.வாசன், ஒன்றியக் கவுன்சிலர்கள் பரத்குமார், செல்வகுமார், செந்தில் குமார், ராஜாமணி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் வரதராஜன் (எ) சரவணன், முரளிதரன், கனகராஜ், ஜவகர், அய்யனார், கிருஷ்ணராஜ், சீதா மலையாளம், பக்தவச்சலம், கருணாகரன், ஒன்றிய நிர்வாகிகள் அசோக்குமார், சரவணன், முருகன், ராஜேந்திரன், சுந்தரமூர்த்தி, ஏழுமலை, சக்திவேல், துளசிதரன், தக்ஷிணாமூர்த்தி, செந்தில், முத்துசாமி, ரட்சகன், தீர்த்தமலை, முத்துகிருஷ்ணன், வெங்கடேசன், குமளம் முருகன், குமார், செந்தில்குமார், அங்காளன், வேலு, மணிகண்டன், பார்த்திபன், பாபு மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### விருதுநகர் வடக்கு மாவட்டம்

# சிவகாசி மாநகரப் பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல்!

## வேட்பு மனு தாக்கல்

விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரப் பொருளாளர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால்,

**விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரப் பொருளாளர் பொறுப்புக்கு தேர்தல் நடைபெற உள்ளதை யொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து அதற்குரிய கட்டணத்துடன் தலைமைக் கழகத்தில் 2024 ஜூலை 24 (புதன்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்ளாக செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளவேண்டும்.**

**தகுதி விவரம்**

வேட்பு மனு முன்மொழிபவரும், வழிமொழிபவரும் மாநகரத்திற்கு உட்பட்ட வட்டச் செயலாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகரப் பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

**வேட்புமனுக் கட்டண விவரம்**

**அவைத் தலைவர் பொறுப்பு**

**பொறுப்புக்கு வேட்புமனுக் கட்டணம்... ரூ.5000/-**

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.500/ - கட்டணம் செலுத்தி தலைமைக் கழகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18
நாள்- 20.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



சேலம் மாநகராட்சி 8வது கோட்டத்தில் 2வது நாளாக மாவட்டக் கழகச் செயலாளரும் சேலம் வடக்கு தொகுதி சட்ட மன்ற உறுப்பினருமான இரா.இராஜேந்திரன் வீதி, வீதியாகச் சென்று மக்களின் குறைகள் கேட்டு மனுக்கள் பெற்றார். உடன் சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் இருந்தனர்.